உ

ஹிதபாஷிணீ வெளியீடு நெ. 1.

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிச்செய்த

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்தோத்திரம்.

தமிழுரையுடன்



இரண்டாம் பதிப்பு

கிடைக்குமிடம்:-

ஹிதபாஷிணீ ஆபீஸ், 1835/3 மேலவீதி, தஞ்சை.

1949

காபிரைட்]

[விலை அணா 4.

उ

श्रीशङ्करभगवत्पादाचार्यप्रणीतम् ॥

॥ श्रीलक्ष्मीनृसिंहस्तोत्रम् ॥

ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யஸ்வாமிகளவர்களால்
அருளிச்செய்யப்பட்ட

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ம ஸ்தோத்திரம்.

கவிபூஷணம் ஆங்கரை

ரங்கஸ்வாமி சாஸ்திரிகளவர்களால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

"ஹிதபாஷிணீ" ஆசிரியர்

R. முத்துக்கிருஷ்ண சாஸ்திரிகளவர்களால்

பிரசுரம் செய்யப்பட்டது.

1949.

கிடைக்குமிடம்:—
ஆசிரியர்: "ஹிதபாஷிணீ"
1835/3 மேலவீதி, தஞ்சை.

முகவுரை.

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாசார்யஸ்வாமிகள் ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் செய்யுமுன் ஸ்ரீ சாரதாதேவியுடன் (ஸ்ரீமண்டனமிச்ரருடைய பத்னீ) பதினேழு தினங்கள் எல்லா சாஸ்திரங்களிலும் வாதம் செய்தார்கள். பதினெட்டாவது நாள் வேறு எவ்வகையிலும் "ஸ்ரீசங்கரரை ஜயிக்கமுடியா"தென்று எண்ணி ஸ்ரீசாரதாதேவி காமசாஸ்திர ஸம்பந்தமான பல கேள்விகளைக் கேட்டாள். அவைகளுக்கும் சரியான விடைகளை அளிக்கவிரும்பி ஓர் காட்டின் வழியாகச் சென்று கொண்டிருக்குங் காலத்தில் அங்கு வேட்டையாடுவதற்காக வந்த "அமருகன்" என்ற அரசன் திடீரென இறந்து பூமியில் விழுந்தான். அவனைச்சேர்ந்தவர்களெல்லாம் அவன் உடலைச்சுற்றி நின்று கொண்டு வருந்திக் கொண்டிருந்தார்கள். ஸ்வாமிகளைக் கண்டதும், அவர்களுடைய பாதங்களில் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, ஸ்வாமி! எங்கள் அரசனை எப்படியாவது பிழைக்கும்படி செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். ஸ்வாமிகளும், "இதுதான் ஸந்தர்ப்பம்" எனக்கருதி தனது யோக சக்தியினால் அவனுடைய உடலில் புகுந்தார்.

ஒருமாதகாலம் வரை அரசனாக இருந்து கற்க வேண்டியவைகளை எல்லாம் கற்றுக்கொண்டார். அதுவரை ஆசார்யஸ்வாமிகளுடைய உடல் ஒரு மலையின் குஹையில் அவர்களுடைய சிஷ்யர்களால் இரக்ஷிக்கப்பட்டு வந்தது. அந்த ஒருமாதகாலத்தில் அமருகனுடைய இராஜ்யம் முன்பு இருந்ததைவிட பல துறைகளிலும் செழிப்படைந்தது. அவனுடைய அந்தப்புறத்திலுள்ள ஸ்திரீகளுக்கு புதியதோர் ஆனந்த உணர்ச்சி ஏற்பட்டது.

இவற்றையெல்லாம் கண்ட அந்த இராஜ்யத்திலுள்ள மந்திரிகள், "நமது அரசனின் உடலில் ஈச்வரனோ அல்லது ஓர் சிறந்த யோகியோ புகுந்துகொண்டிருக்க வேண்டும். இப்படி ஏற்பட்டது நம்முடைய பாக்யம். எப்படியாவது இவரையே நம்நாட்டில் நீடித்திருக்கும்படி செய்துவிட வேண்டும்" எனக் கருதி "எங்கேயாவது ஒரு மனித உடல் அசைவற்று கிடந்தால் அதைக்கொளுத்தி விடுங்கள் என்று சேவகர்களுக்கு உத்திரவு போட்டார்கள்.

அவர்கள் பல விடங்களில் தேடிவிட்டு, கடைசியில் ஓர் மலையின் குஹையில் கிடந்த ஆச்சார்யாளுடைய உடலைசிதையில் வைத்துக்கொளுத்த ஆரம்பித்தார்கள். உடனே "பத்மபாதர்" முதலிய ஸ்வாமிகளுடைய சிஷ்யர்கள் ஸ்வாமிகளிருக்குமிடத்திற்கு விரைந்து சென்று, 'மற்றவர்கள் அறிய முடியாததும்,

ஸ்வாமிகள் மட்டும் அறியக்கூடியதுமான முறையில் அவர்களுடைய பூர்வஸ்திதியை ஞாபகப்படுத்தினார்கள். அதற்குள் உடலில் ஒருபாகத்தில் தீயும் பிடித்துக்கொண்டு விட்டது. அத்தருணத்தில் ஆசார்யாள் தன் உடலில் திருப்பப் புகுந்து அதில் பற்றிக்கொண்ட தீ அணைவதின்பொருட்டு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மனைத் துதித்தார்கள். எந்த இடத்திலும் எந்த உருவத்திலும் வந்து அருள் புரியும் மூர்த்தி ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்மன். ஆதலால்தான் அவரை அந்தசமயத்தில் துதித்தார்கள்.

உடனே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மனுடைய அருளால் ஸ்வாமிகளுடைய உடலில் பற்றிக்கொண்ட தீ அணைந்துவிட்டது.

இந்த ஸ்தோத்திரத்தில், பன்னிரண்டு சுலோகங்களே உள என்று சிலரும், பதினேழு சுலோகங்கள் உள என்று வேறு சிலரும் கருதுகின்றனர். சுலோகங்களின் ரீதியை கவனிக்குங்கால் பதினேழையும் ஆசார்யாள் இயற்றி இருக்ககூடும் என ஊஹிக்கலாமாகையால், இங்கு பதினேழும் தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப் பட்டிருக்கின்றன.

இந்த பதினேழு சுலோகங்களுள் எதிலும் என் உடலில் பற்றிக்கொண்ட தீ அணைந்துவிடவேண்டுமென்று பிரார்த்திக்கப் படவில்லை. ஆனால் ஸம்ஸாரத்தைப் பெரிய காடாகவும், ஸமுத்திரமாகவும், பாழுங்கிணறாகவும், மரமாகவும், ஸர்ப்பமாகவும், காட்டுத்தீயாகவும், வலையாகவும், நிரூபணம் செய்து, அவற்றிலிருந்து தன்னை விடுவிக்கக் கைகொடுத்தருள வேண்டும் எனப்பிரார்த்திக்கப்படுகிறது. ஸமஸ்த துக்கங்களுக்கும் மூலகாரணமான ஸம்ஸார பந்தம் அகன்று விட்டால் மற்ற துக்கங்களெல்லாம் தானே நசித்து விடும் என்ற அபிப்ராயம் போலும்!

இந்த ஸ்த்தோத்திர படனத்தால் பலர் ஐஹிகபயன்களை விசேஷமாக அடைந்திருக்கிறார்கள். ஆகவே இதை எல்லோரும் பாராயணம் செய்ய வேண்டியது மிக அவசியம். ஸம்ஸ்கிருதத்தில் அதிகபயிற்சி இல்லாதவர்கள்கூட இதன் அர்த்தத்தை எளிதில் புரிந்துகொள்வதின் பொருட்டு தமிழில் பதவுரை, கருத்துரை இவைகளுடன் சேர்த்து இது அச்சிடப் பட்டிருக்கிறது.

தெளிவாகவும் சுருக்கமாகவும் சரியான தமிழ் மொழி பெயர்ப்பை எழுதி உதவிய என் வேதாந்தகுரு ஆங்கரை பிரம்மஸ்ரீ ரங்கஸ்வாமி சாஸ்திரிகளவர்களுக்கு நான் எந்நாளும் நன்றியுடன் இருக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

R. முத்துகிருஷ்ண சாஸ்திரி
(Publisher.)

உ

॥ श्रीलक्ष्मीनृसिंहस्तोत्रम् ॥

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ம ஸ்தோத்திரம்.

श्रीमत्पयोनिधिनिकेतन चक्रपाणे
भोगीन्द्रभोगमणिरञ्जितपुण्यमूर्ते ।
योगीश शाश्वत शरण्य भवाब्धिपोत
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् । (1)

ஸ்ரீமத்பயோநிதிநிகேதன சக்ரபாணே
போகீந்த்ரபோகமணிரஞ்சிதபுண்யமூர்த்தே।
யோகீச சாச்வத சரண்ய பவாப்திபோத
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் ॥

(ப. ரை) **श्रीमत्पयोनिधिनिकेतन** – திருவளரும் பாற்கடலை உறைவிடமாயுடையவனே **चक्रपाणे** – சக்ராயுதத்தை கையில் தரிப்பவனே **भोगीन्द्रभोगमणिरञ्जितपुण्यमूर्ते** – ஆதிசேஷனது தலையிலுள்ள ரத்தினங்களால் சிவந்துப்ரகாசிக்கின்ற மங்களகரமான சரீரத்தை உடையவனே. **योगीश** – யோகிகளுக்கெல்லாம் தலைவனே **शाश्वत** – அழிவின்றி நித்யமாயிருப்பவனே **शरण्य** — சரணமடைந்தவர்களைக்காப்பதில் ஸமர்த்தனே **भवाब्धिपोत** — ஸம்ஸாரக்கடலைத்தாண்டுவதற்கு ஓடம்போன்றவனே **लक्ष्मी — नृसिंह** – லக்ஷ்மியுடன் கூடவீற்றிருக்கும் ஓ அழகிய நரசிங்கப்பெருமானே **मम करावलम्बं देहि** = எனக்குக்கைப்பிடியைக் கொடுத்தருளவேண்டும்.

குறிப்பு- இதை "லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்துதி"யென்றும் "கராவலம்பன ஸ்தோத்திரம்" என்றும் கூறுவார்கள். இஃது ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளால் ஒரு காரியநிமித்தம் பரகாயபிரவேசம் செய்தபொழுது தனதுஉடலை அரசாங்கத்தார் கொளுத்தமுயற்சிக்குந்தருவாயில் துதிக்கப்பட்டது. இதைப்ரதிதினமும் அனுஸந்திப்பவர்களுக்கு எவ்விதமான பயமும் அணுகாதென்பது திண்ணம்.

கருத்து:- உலகத்தில் ஒரு ஆபத்தில் சிக்கிக்கொண்ட ஒருவனை மற்றொருவன் கை தூக்கிவிடுவது என்பது ஸகஜம். இங்கு மகத்தான ஸம்ஸாரபந்தத்தில் அகப்பட்டு மீள வழி தெரியாமல் சுழன்றுவரும் ஜீவனைக் கைதூக்கிவிடுமாறு ஸ்ரீலக்ஷ்மீநரசிம்மனை வேண்டுகிறார். அதற்கேற்றவாறு விசேஷணங்கள் அமைந்துள்ளன. பாற்கடலில்பள்ளிகொண்டதினால் அமுதமளிக்கவல்லவரும் சக்ராயுதத்தால் பகைவரை ஒட்டவல்லவனும் ஆதிசேஷனதுஉடலில்சயனித்திருப்பதால்விஷபயத்தை அகற்றுபவனும்யோகீசனதலால் யோகமாயையைவென்றவனும், நித்யனானதால் நாசமற்றவனும், விபீஷணாதிகளைக்காத்திருப்பதனால் சரணாகதரக்ஷகனும், ஞானமில்லாதவரையும் பக்தியினால் பவக்கடலைத் தாண்டுவிப்போனுமான ஓ லக்ஷ்மீந்ருஸிம்மனே, ப்ரஹ்லாதனை ஆபத்திலின்றும் காத்தருளிய பிரபுவே; என்னையும் கைதூக்கி விட்டு இரக்ஷித்தருளவேண்டும் (என்பதாம்)

ब्रह्मेन्द्ररुद्रमरुदर्ककिरीटकोटि—
संघट्टितांघ्रिकमलामलकान्तिकान्त ।
लक्ष्मीलसत्कुचसरोरुहराजहंस
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ 2

ப்ரம்மேந்த்ர ருத்ர மருதர்க்ககிரீடகோடி
ஸங்கட்டிதாங்க்ரி கமலாமலகாந்திகாந்த ।
லக்ஷ்மீலஸத்குச ஸரோருஹ ராஜஹம்ஸ
லக்ஷ்மீந்ருஸிம்ம மம தேஹி கராவலம்பம் ॥

(ப. ரை) ब्रह्मेन्द्ररुद्रमरुदर्ककिरीटकोटिसंघट्टितांघ्रिकमल —

பிர்மா, இந்திரன், ருத்திரன், சூர்யன் மருத்துக்கள், இவர்களுடைய கிரீடங்களின் முனைகளால் உறைபட்டு நிர்மலமாகப்ரகாசிக்கின்ற தாமரைபோன்ற இருசரணங்களை உடையவனே.
अमलकान्तिकान्त சுத்தமான தேககாந்தியால் ஜ்வலிப்பவனே!

(இரண்டையும் ஒரே பதமாயும் கொள்ளலாம்.)

लक्ष्मीलसत्कुचसरोरुहराजहंस – லக்ஷ்மீதேவியினது அழகிய இருஸ்தனங்களாகிறதாமரைப்பூவிற்கு ராஜஹம்ஸம் போன்றவனே
लक्ष्मीनृसिंह = ஏ லக்ஷ்மீந்ருஸிம்மப்பெருமானே **मम देहि करावलम्बम्** – எனக்குக்கைப்பிடியைக் கொடுத்தருளவேண்டும்.

(க - து) "भीषास्मात् वातः पवते" — "இவனிடம் பயத்தால் காற்று வீசுகிறது" என்றும் अङ्गान्यन्या देवताः — மற்ற தேவதைகள் இவனுக்கு அவயவங்களே' என்றும் சொல்லியபடி இதர தேவர்களால் வணங்கப்படுவதால் அவர்கள் செய்யும் இடையூறுகளைப் பரிஹரிக்க வல்லவன் என்பது கருத்து.

तद्द देवानामप्रियं यदेतन्मनुष्या विद्युः = (மனிதர்கள் ஆத்மாவை அறிவது தேவர்களுக்குப்ரியமில்லாத விஷயம்) என்ற சுருதியே மனிதன் ஞானமடைவதை தேவர்கள் கெடுப்பார்கள் என்று கூறுநிற்பதால் அவர்களுக்கு மேம்பட்ட தெய்வத்தை வணங்குகிறார். இகத்திலும் செல்வத்தை அளிக்கவல்லவன் என்பதை லக்ஷ்மியின் துணைவன் என்பதால் த்வனிக்கிறார்.

संसारदावदहनातुरभीकरोरु
ज्वालावलीभिरति दग्धतनूरुहस्य।
त्वत्पादपद्मसरसीशरणागतस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम्। 3

ஸம்ஸாரதாவதஹநாதுரபீகரோரு
ஜ்வாலாவலீபிரதிதக்ததநூருஹஸ்ய]
த்வத்பாதபத்மஸரஸீசரணாகதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்]] (3)

(ப. ரை) संसारदावदहनातुरभीकरोरुज्वालावलीभिः - ஸம்ஸாரமாகிற காட்டுத்தீயினது, பயந்தவர்கட்கு மிகுந்தபயத்தை அளிக்கும் ஜ்வாலா சமூகங்களாலே. अतिदग्धतनूरुहस्य - மிகவும் கருகிப்போனரோமங்களை உடையவனும். त्वत्पादपद्मसरसीशरणागतस्य - உமது தாமரைபோன்ற திருவடிகளாகிற தடாகத்தை சரணமடைந்தவனும் உள்ள मे करावलम्बं देहि - எனக்கு கைப்பிடியைக்கொடுத்தருளவும்.

கருத்து:— ஸம்ஸாரம் கொழுந்துவிட்டு எரிகிறது. உடம்பெல்லாம்வெந்து போகிறது. தாங்கமுடியாமல் உமது திருவடியாகிய தாமரைக்குளத்தை அடைந்தேன். காத்தருளவும். (என்றபடி) (3)

संसारजालपतितस्य जगन्निवास
सर्वेन्द्रियार्थबडिशाग्रझषोपमस्य ।
प्रोत्खण्डितप्रचुरतालुकमस्तकस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् । (4)

ஸம்ஸாரஜாலபதிதஸ்ய ஜகந்நிவாஸ
ஸர்வேந்த்ரியார்த்தபடிசாசஜஷோபமஸ்ய ।
ப்ரோத்கண்டிதப்ரசுரதாலுகமஸ்தகஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ம மம தேஹி கராவலம்பம் ॥ (4)

(பதவுரை) **हे जगन्निवास** – ஸமஸ்தஜகத்துக்கும் வாஸஸ்தானமாகிய **लक्ष्मीनृसिंह** – ஓ லக்ஷ்மீந்ருஸிம்ஹ மூர்த்தியே **संसारजालपतितस्य** – ஸம்ஸாரமாகிறவலையில் சிக்குண்டவனும் **सर्वेन्द्रियार्थबडिशाग्रझषोपमस्य** – சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்களென்னும் தூண்டியிலுள்ள உணவுக்காசைப்படும் மீனுக்கு ஒப்பானவனும், **प्रोत्खण्डितप्रचुरतालुकमस्तकस्य** திருகிக்குள்ளப்பட்ட நாக்கையும் தலையையும் உடையவனுமிருக்கிற **मे करावलम्बं देहि** — எனக்குக்கைப்பிடியைத் தந்தருளவும்.

கருத்து:- ஸம்ஸாரம் ஓர் வலைபோலும். காமன் தூண்டி முள்ளைப் போட்டிருக்கிறான். அதின் நுனியில் இருக்கும் ஐம்பொறிகள் மாமிசத்துக்குக் கொப்பாம். அதற்காசைப் பட்டுச் சென்று துள்ளினேன். கழுத்தைத் திருகிப் போடப்பட்ட மீன் போலத்துடிக்கிறேன். என்னைக் காற்கவேண்டும். (4)

संसारकूपमतिघोरमगाधमूलं
संप्राप्य दुःखशतसर्पसमाकुलस्य ।
दीनस्य देव कृपणापदमागतस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ (5)

ஸம்ஸாரகூபமதிகோரமகாதமூலம்
ஸம்ப்ராப்ய துஃகசதஸர்ப்பஸமாகுலஸ்ய ।
தீனஸ்ய தேவ க்ருபணாபதமாகதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் ॥

(ப. ரை) **हे देव लक्ष्मीनृसिंह** — ஸ்வப்ரகாசனுன நரஸிம்ஹ மூர்த்தியே **अतिघोरं** — மிகவும் பயங்கரமானதாயும் **अगाधमूलं** மிகவும் ஆழமான அடித்தலத்தை உடையதாயுமிருக்கிற **संसारकूपं** — ஸம்ஸாரமாகிறபாழுங்கிணற்றில் **संप्राप्य** — விழுந்து **दुःखशतसर्पसमाकुलस्य** — துக்கங்களாகிற நூற்றுக்கணக்கான பாம்புகளால் பயமுறுத்தப்படுவோனுப் **दीनस्य** — கதியற்றவனுயும் **कृपणापदं** — பரிதபிக்கத்தக்க நிலையிலுள்ள ஆபத்தை **आगतस्य** அடைந்தவனுமாகிய **मम करावलम्बं देहि** — எனக்குக்கைப்பிடியைக்கொடுத்தருள வேண்டும்.

கருத்து:- ஸம்ஸாரமென்ற பெரியதோர் பாழும் தூரவு. ஆழமோ அறிய முடியவில்லை. ஆத்யாத்மிகம் முதலான துக்கங்கள் பாம்புகள் போல் பயமுறுத்துகின்றன. மிகவும் தீனனுய் பரிதாப நிலையில் நிற்கின்றேன். வைத்தியர்கள், வைதீகர்கள், பிராயச்சித்தங்கள் எல்லாம் கைவிட்டன. ஸ்வப்ரகாசமாய் ஸர்வ வல்லமையுடன் விளங்கும் நரஸிம்மனே! நீயே இப்பொழுது கதி என்பதாம். (5)

संसारभीकरकरीशकराभिघात
निष्पिष्टमर्मवपुषः सकलार्तिनाश ।
प्राणप्रयाणभवभीतिसमाकुलस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ (6)

ஸம்ஸாரபீகரகரீசகராபிகாத
நிஷ்பிஷ்டமர்மவபுஷஸ்ஸகலார்த்திநாச ।
ப்ராணப்ரயாணபவபீதிஸமாகுலஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ம மமதேஹி கராவலம்பம் ॥ (6)

(ப. ரை) **हे सकलार्तिनाश लक्ष्मीनृसिंह** — எல்லாருடையவும் எவ்வித துக்கத்தையும் போக்கவல்லவனே! அழகியசிங்கப் பெருமாளே **संसारभीकरकरीशकराभिघातनिष्पिष्टमर्मवपुषः** — ஸம்ஸாரமாகிற பயங்கரமானயானையின் துதிக்கையால் நசுக்கப்பட்ட மர்மங்களையுடைய சரீரத்தையுடையவனும் **प्राणप्रयाणभवभीतिसमाकुलस्य** — உயிர்போகும்தருவாயிலுள்ளபயத்தால்நடுங்குபவனுமான **मे करावलम्बं देहि** எனக்குக்கைப்பிடியைகொத்தருளவும்.

கருத்து:- யானையைக்கண்டால் யாரும் பயப்படுவார்கள். ஸம்ஸாரமாகிற மதயானை என்னை மிதித்து நசுக்குகிறது. அங்கங்கள் நொருங்குகின்றன. சிங்கத்தைத்தவிற யானையை துரத்த யாருமில்லை நரசிங்கமூர்த்தியே! நீர் ரக்ஷிக்க வேண்டும். (6)

संसारसर्पघनवक्त्रभयोग्रतीव
    दंष्ट्राकरालविषदग्धविनष्टमूर्तेः ।
नागारिवाहन सुधाब्धिनिवास शौरे
    लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ (7)

ஸம்ஸாரஸர்ப்பகனவக்த்ரபயோக்ரதீவ்ர
    தம்ஷ்ட்ராகராள விஷதக்தவிநஷ்டமூர்த்தே: ।
நாகாரிவாஹனஸுதாப்திநிவாஸ சௌரே
    லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் ॥ (7)

(ப. தை) **नागारिवाहन** – கருடவாஹனனும் **सुधाब्धिनिवास** அமுதக்கடலில் வசிப்பவனும் **शौरे** –வசுதேவன் புதல்வனாய் அவதரித்தவனாயும் இருக்கிற **हे लक्ष्मीनृसिंह** ஓ நரசிங்கமூர்த்தியே **संसारसर्पघनवक्त्रभयोग्रतीव्रदंष्ट्राकरालविषदग्धविनष्टमूर्तेः** ... ... ஸம்ஸாரமாகிறஸர்ப்பத்தின் வாயிலுள்ள பயங்கரமாயும் உக்ரமாயும் தீக்ஷ்ணமாயும் இருக்கிறவிஷப்பற்களால் கடிபட்டுபொசுங்கிய தேஹத்தைஉடைய **मे करावलम्बं देहि** – எனக்குகைப்பிடியைக் கொடுத்தருளவேண்டும்

க. து:- ஸம்ஸாரத்தை ஸர்ப்பமாகவர்ணிப்பது வழக்கம்

संसारसर्पदष्टानां जन्तूनामविवेकिनाम् ।
चन्द्रशेखरपादाब्जस्मरणं परमौषधम् ॥

என்றது முதலானவையே சாக்ஷி. அவ்விதப்பாம்பு கடித்து மூர்ச்சித்திருக்கும் என்னை கருடவாஹனனாயும், அமுதக்கடலில் துயின்றும், கிருஷ்ணவதாரம் செய்து காளீயமர்த்தனம் முதலியவைகளால், விஷத்தைப்போக்கவல்ல நீ கைதூக்கிவிட்டு பிழைப்பிக்கவேணுமென்பது கருத்து. (7)

संसारवृक्षमघबीजमनन्तकर्म
    शाखाशतं करणपत्रमनङ्गपुष्पम् ।
आरुह्य दुःखफलितं पततो दयालो
    लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ (8)

ஸம்ஸாரவ்ருக்ஷமகபீஜமநந்தகர்ம
　　சாகாசதம் கரணபத்ரமனங்கபுஷ்பம் ।
ஆருஹ்ய துக்கபலிதம் பததோ தயாளோ
　　லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் (8)

(ப—ரை) **दयालो** தயை உள்ளவரான **हेलक्ष्मीनृसिंह** ஓலக்ஷ்மீ நரசிங்கப்பெருமாளே **अघबीजं** — பாபமாகிறவிதையிலிருந்து முளைத்ததாயும் **अनन्तकर्मशाखाशतं** —அளவற்றநாளுவிதகர்மங்கள் ஆகிற கிளைகளுள்ளதாயும் **करणपत्रं** - இந்திரியங்களாகிற இலைகளையுடையதாயும் **अनङ्गपुष्पं** - காமனுகிறபுஷ்பத்தையுடையதாயும் **दुःखफलितं** - துக்கங்களாகிற பழங்களைப்பயப்பதாயுமிருக்கிற **संसारवृक्षं** ஸம்ஸாரமாகிற மரத்தின்மேல் **आरुह्य** ஏறிவிட்டு **पततः** தலைகீழாக விழுகின்ற **मे करावलम्बं देहि** எனக்குக்கைப்பிடியைக்கொடுத்தருளவும்.

ஸம்ஸாரத்தை விருக்ஷமாகவர்ணிப்பது ஸஹஜம்.

ऊर्ध्वमूलमवाक्शाखं - என்றது ஆரண்யம் - **ऊर्ध्वमूलोऽवाक्शाख** — என்னும் கடவல்லி **ऊर्ध्वमूलमधः शाखमश्वत्थं प्राहुरव्ययम्** ... என்றது கீதை. **एकायनोऽसौ द्विफलस्त्रिमूलः** என்கிறது பாகவதம்

காலத்தச்சன் வெட்டிமுறிக்கும் மரமென்றுளார் அறிஞர். இங்கு ஸ்ரீஸ்வாமிகள் அதை ஓர் விஷ விருக்ஷமாக உருவகப்படுத்துகின்றார் — பாபத்திலிருந்து முளைத்ததாம் (புண்யமும் பாபத்திற்கு ஒப்பாகும்) பலவிதமான லௌகிக வைதிக கர்மங்களே கிளைகளொப்பனவாம். பதினொரு இந்திரியங்களும் இலைகள் போலத்தளிர்கின்றனவாம். காமமே பூவிற்கொப்பாம். இதைக் கண்டு ஆசையால் ஏறினேன். துக்கங்களே பழுத்துதொங்குகின்றன. இறங்கமுயன்றேன். தவறி விழுந்துவிட்டேன். கீழே நரகக்குழி. பரமதயாளுவான ஹே நரசிங்கமூர்த்தியே தாமதியாது இச்சமயம் ஓடிவந்து என்னைத்தாங்கிக்காத்தருள வேண்டுமென்பது.
(8)

संसारसागरविशालकरालकाल
　　नक्रग्रहग्रसननिग्रहविग्रहस्य ।
व्यग्रस्य रागरसनोर्मिनिपीडितस्य
　　लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ (9)

ஸம்ஸாரஸாகரவிசாலகராலகால
நக்ரக்ரஹக்ரஸனநிக்ரஹவிக்ரஹஸ்ய ।
வ்யக்ரஸ்ய ராகரஸனோர்மி நிபீடிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ம மம தேஹி கராவலம்பம் ॥ (9)

(ப — ரை) **हे लक्ष्मीनृसिंह** -- ஏ லக்ஷ்மீந்ருஸிம்மனே **संसारसागरविशालकरालकालनक्रग्रहग्रसननिग्रहविग्रहस्य** - ஸம்ஸாரமாகிறசாகரத்தில் விஸ்தாரமான காலமாகிற பயங்கரமான முதலையினது பிடியினுலும் விழுங்குவதாலும் அவஸ்தையை அடைந்த சரீரத்தை உடையவனும் **व्यग्रस्य** —- பலவிதமான கவலையுடையவனும் **रागरसनोर्मिनिर्पीडितस्य** — நானுவிதரஸங்களால் நானுவிதமாகத் தோன்றுப நாக்கின் அவஸ்தாபேதங்களாகிற அலைகளால் அலைக்கப்படுகிறவனுமான **मे** – எனக்கு **करावलम्बं** – கைப்பிடியை **देहि** – கொடுத்தருளுவீராக

(க – து) இச்சுலோகத்தில் ஸம்ஸாரத்தை ஸமுத்திரமாக உருவகப்படுத்துகிருர் (துக்கமாகிற ஜலமென்றும் பாவித்து கொள்ளலாம்.) அதில் காலனென்ற பெரிய முதலை பிடித்து விழுங்க ஆரம்பிக்கிறது. தாழம்பூவைப்போல் முதலையின் பற்கள் சில வெளிமுகமாயும் சில உள் முகமாயும் வளைந்து கூர்மையாய் இருப்பதால் புகுந்தாலும் துன்பம். மீண்டாலும்துன்பமே. அச்சமயத்திலும் பாம்பின் வாயிலுள்ள தேரை, ஈயைப் பிடிப்பதுபோல் பலவித ஆசைகளில் மனது செல்லுகிறது. கஜேந்திரனை காத்ததுபோல் நீரே இத்தருணம் காத்தருள வேண்டும் என்பதாம். 9

संसारसागरनिमज्जनमुह्यमानं
दीनं विलोकय विभो करुणानिधे माम् ।
प्रह्लादखेदपरिहारपरावतार
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ 10

ஸம்ஸாரஸாகரநிமஜ்ஜனமுஹ்யமானம்
தீனம் விலோகய விபோ கருணாநிதே மாம் ।
ப்ரஹ்லாதகேதபரிஹாரபராவதார
லக்ஷ்மீந்ருஸிம்ம மமதேஹி கராவலம்பம் ॥ 10

(ப – ரை) **हे करुणानिधे** – கருணைக்கடலே **प्रह्लादखेदपरिहारपरावतार** – ப்ரஹ்லாதனுடைய கஷ்டங்களை விலக்குவதற்காகவே

அவதரித்தவனே **विभो** – ஸர்வவல்லமையுள்ளவனே **संसारसागरनिमज्जनमुह्यमानम्** – ஸம்ஸாரமாகிற சமுத்திரத்தில் முழுகி மயங்கிக்கிடக்கும் **दीनं** — மிகவும் தீனனான **मां** – என்னை **विलोक्य** — (கடைக்கண்ணால்) பார்க்கவேண்டும் **लक्ष्मीनृसिंह** – அழகிய நரசிங்கரே **मम** எனக்கு **करावलम्बं** – கைப்பிடியை **देहि** – கொடுத்தருளவேண்டும்.

(க - து) ஸம்ஸாரத்தில் மூழ்கிமயங்குமென்னை கடைக்கண்ணால் பார்த்துக் கை தூக்கிவிடவேண்டும். ப்ரஹ்லாதனைப்போல் பரிவுடன் இரக்ஷிக்கவேண்டுமென்பதாம். (10)

संसारघोरगहने चरतो मुरारे
मारोग्रभीकरमृगप्रवरार्दितस्य ।
आर्तस्य मत्सरनिदाघनिपीडितस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ 11

ஸம்ஸார கோரகஹனே சரதோ முராரே
மாரோக்ரபீகரம்ருகப்ரவரார்த்திதஸ்ய ।
ஆர்த்தஸ்ய மத்ஸரநிதாகநிபீடிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ம மம தேஹி கராவலம்பம் 11

(ப - ரை) **हे मुरारे** – முரன் என்ற அசுரனைக்கொன்றவனான **लक्ष्मीनृसिंह** – லக்ஷ்மீநரஸிம்மனே **संसारघोरगहने** – ஸம்ஸாரமாகிறகோரமானபெருங்காட்டில் **चरतः** திரிபவனும் **मारोग्रभीकरमृगप्रवरार्दितस्य** மன்மதனென்ற உக்ரமாயும்பயங்கரமாயுமுள்ள மிருகராஜனால் பீடிக்கப்பட்டவனும் **आर्तस्य** = மிகவும் துன்புற்றவனும் **मत्सरनिदाघनिपीडितस्य** – மாத்ஸர்யம் என்ற கடுந்தாபத்தால் தஹிக்கப்பட்டவனுமிருக்கிற **मम करावलम्बं देहि** எனக்குக்கைப்பிடியைக்கொடுத்து உதவவேண்டும்

(க – து) உதவிசெய்யத்தகுந்தகாலம் இதுவே என ஜீவனையும் விசேஷித்து கூறுகிறார். பயங்கரமான ஸம்ஸாரமாகிறகாட்டில் அசூயை என்ற தாபம் கொளுத்த காமம் என்ற மிருகேந்திரன் வாயைப்பிளந்து விழுங்குகிறது. ஏ முராரே நரஸிம்மா! இச்சமயம் ஓடிவந்து என்னைக்காத்தருளவேண்டுமென்றபடியாம். 11

वद्ध्वा गले यमभटा बहु तर्जयन्तः
कर्षन्ति यत्र भवपाशशतैर्युतं माम् ।
एकाकिनं परवशं चकितं दयालो
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ 12

பத்வா களே யம படா பகுதர்ஜயந்த:
கர்ஷந்தி யத்ர பவபாசசதைர் யுதம் மாம் |
ஏகாகினம் பரவசம் சகிதம் தயாளோ
லக்ஷ்மீந்ருஸிம்ம மம தேஹி கராவலம்பம் ||

(ப-ரை) **यमभटाः** — இயமதூதர்கள் **भवपाशशतैः** — ஆயிரக்கணக்கான ஸம்ஸாரபாசங்களால் **युतं** — சூழப்பட்டவனும் **एकाकिनं** — தனிமையாயும் **परवशं** — பராதீனனாயும் **चकितम्** நடுங்குபவனாயுமிருக்கின்ற **मां** — என்னை **गले** — கழுத்தில் **बद्ध्वा** — பாசத்தால்கட்டி **बहु** — ரொம்பவும் **तर्जयन्तः** — அசட்டிக்கொண்டு **यत्र** — எங்கேயோ **कर्षन्ति** — இழுத்துச்செல்லுகிறார்கள் **दयालो** —தயையுள்ளவரான **लक्ष्मीनृसिंह** -அழகியநரசிங்கப்பிரபுவே **मे** — எனக்கு **करावलम्ब देहि** — கைப்பிடியைக் கொடுத்தருள்வீராக!

(க-து) எற்சனவே, ஆசாபாசங்களால் கட்டுண்ட என்னை இயமதூதர்கள் பாசத்தால் கழுத்தில் இணைத்து நரகத்திற்கு அழைத்துச்செல்லுகிறார்கள். வேறுகதியின்றி தீனனாய் நடுங்கும் என்னைக்கைதூக்கிவிட்டுக் காத்தருளவேண்டும். 12

लक्ष्मीपते कमलनाभ सुरेश विष्णो
वैकुण्ठ कृष्ण मधुसूदन पुष्कराक्ष ।
ब्रह्मण्य केशव जनार्दन वासुदेव
देवेश देहि कृपणस्य करावलम्बम् ॥ 13

லக்ஷ்மீபதே கமலநாப ஸுரேச விஷ்ணோ
வைகுண்ட கிருஷ்ண மதுஸூதன புஷ்கராக்ஷ |
ப்ரஹ்மண்ய கேசவ ஜனார்த்தன வாஸுதேவ
தேவேச தேஹி கிருபணஸ்ய கராவலம்பம் ||

(ப-ரை) **हे लक्ष्मीपते** — லக்ஷ்மிக்குநாதனே **कमलनाभ** —உந்தியில் தாமரையுடையவனே **सुरेश** தேவர்கட்கெல்லாம் தலைவனே **विष्णो** — வ்யாபனசீலனே **कृष्ण** — பக்தபாபகர்ஷண **मधुसूदन** — மது என்ற அசுரனைக்கொன்றவனே **पुष्कराक्ष** — செந்தாமரைக்கண்ணனே **ब्रह्मण्य** ப்ராம்மணர்கட்கும் தேவர்கட்கும் ஹிதனே **केशव** — கேசி என்ற அசுரனைக்கொன்றவனே **जनार्दन** — ஜனங்களால் நற்கதியை வேண்டப்பட்டவனே **वासुदेव** — ஸர்வபூதங்களுக்கும் வாஸஸ்தானமாய்ப்ரகாசிப்பவனே **देवेश** — ஸர்வேந்திரியப்ரவர்த்தகனே **कृपणस्य** — தீனனான **मे**

करावलम्बं देहि – எனக்குகைப்பிடியைக்கொடுத்தருளல் வேண்டும்.

(க – து) **योवा अविदित्वा अस्माल्लोकात्प्रैति स कृपणः** என்ற உபநிஷத் ஞானமில்லாதவனை கிருபணனென நிந்திக்கிறது. கீதையும் **कार्पण्यदोषोपहतस्वभावः** என்று கரைகிறது. அப்பேற்ப... என்னை எவ்வாற்ருலும், கை தூக்கிவிட வன்மையுள்ள... பகவான் என்பதை பல விசேஷணங்களால் விளக்கு... லக்ஷ்மீகாந்தனுதலால், பரிபாலிக்கவும், கமலநாபனு... சிருஷ்டிக்கவும், ஸுரேசவிஷ்ணுபதங்களால் நியமிக்கவும்... கிருஷ்ணபதத்தால் பாபங்களைவிலக்கவும், மதுஸூதனபத... பகைவர்களை வெல்லவும் ப்ரஹ்மண்யபதத்தால் வேதவே... களுக்கு நன்மையளிக்கவும் வாஸுதேவனென்று ஸர்வ... துவமும், தேவேசனென்று நமது இந்திரியங்களை தீயவழி... லாமல் திருப்பவும் ஸாமர்த்தியம் குறிக்கப்பட்டுள்ளது க...

> **एकेन चक्रमपरेण करेण शङ्खं**
> **अन्येन सिन्धुतनयामवलम्ब्य तिष्ठन् ।**
> **वामेतरेण वरदाभयपद्मचिह्न**
> **लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥**

> ஏகேன சக்ரமபரேண கரேண சங்கம்
> அன்யேன ஸிந்துதனயாமவலம்ப்ய திஷ்...
> வாமேதரேண வரதாபயபத்மசின்ஹ
> லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்ப...

(ப – து) **वरदाभयपद्मचिह्न** - வரம் அபயம் பத்மம் இவை... சின்னங்களாக உடையவனே **लक्ष्मीनृसिंह** ஹே அழகி... சிங்கரே! **एकेन करेण** — ஒரு கையினுல் **शङ्खं** – சங்கத்... **अन्येन** – மற்றொரு கையினுல் **सिन्धुतनयां** – லக்ஷ்மீதேவி... **अवलम्ब्य** — தழுவியனுய் **तिष्ठन्** – நின்றுகொண்டு **वामेतरेण** வலது கையினுல் **मे** – எனக்கு **करावलम्बम्** — ஹஸ்தாவலம்பத்தை **देहि** .... கொடுத்தருளவேண்டும்.

(க – து) பகவானுக்கு நான்கு புஜங்கள். ஒன்றில் சங்கம், மற்றொன்றில் சக்ரம், மூன்ருவதில் அபயம் நான்கில் வரமளிப்பதாம். இந்தசமயம் லக்ஷ்மீயை இடது கையில் ஆலிங்கனம்செய்துகொண்டுளார். ஆகையால் வராபயங்களைச்சின்னமாகக்கொண்டு நான்காவதான வலது கையால் தூக்கிவிடவேண்டுமென்பதாம்.

अन्धस्य मे हृतविवेकमहाधनस्य
चोरैः प्रभो बलिभिरिन्द्रियनामधेयैः ।
मोहान्धकूपकुहरे विनिपातितस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ 15

அந்தஸ்ய மே ஹ்ருதவிவேகமஹாதனஸ்ய
சோரை: ப்ரபோ பலிபிரிந்திரியநாமதேயை: ।
மோஹாந்தகூபகுஹரே விநிபாதிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் ॥

(ப - ரை) **हे लक्ष्मीनृसिंह** — ஓ லக்ஷ்மீ நரஸிங்கப்பெருமாளே **अन्धस्य** — குருடனாயும் **बलिभिः** - பலவான்களான **इन्द्रिय नामधेयैः** — இந்திரியங்கள் என்று பெயருள்ள **चोरैः** – திருடர்களால் **हृतविवेकमहाधनस्य** - அபஹரிக்கப்பட்ட விவேகமாகிற பெரும் செல்வத்தையுடையவனாயும் **मोहान्धकूपकुहरे** .... மோஹமாகிறபாழுங்கிணற்றின் குறவில் **विनिपातितस्य** - தள்ளி விடப்பட்டவனாயுமிருக்கிற **मे करावलम्बं देहि** – எனக்குக்கைப்பிடியைக்கொடுத்தருளல்வேண்டும்.

(க - து) சாந்தோக்யப் ஆறுவது அத்தியாயத்தில் **'गान्धारपुरुष'** திருஷ்டாந்தத்தின் உண்மையை விளக்குகிறது இந்த சுலோகம். அதாவது, இந்திரியங்களாகிற திருடர்கள் மிகுந்த பலத்துடன் என் ஹிருதயத்தில் புகுந்து பகுத்தறிவாகிற சொத்தைக்கொள்ளை அடித்து மோஹமாகிறபாழுங்கிணற்றில் தள்ளிவிட்டார்கள். அஜ்ஞானத்திரையால் கண் மறைக்கப்பட்டிருக்கிறது. அதை நீக்கிபந்தத்தைவிலக்கிகாத்தருளவேண்டும் என்றகருத்து. 15

प्रह्लादनारदपराशरपुण्डरीक
व्यासादिभागवतपुङ्गवहृन्निवास ।
भक्तानुरक्तपरिपालनपारिजात
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ 16

ப்ரஹ்லாதநாரதபராசரபுண்டரீக
வ்யாஸாதிபாகவதபுங்கவஹ்ருந்நிவாஸ ।
பக்தானுரக்தபரிபாலனபாரிஜாத
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹிகராவலம்பம் ॥

(ப - ரை) **प्रह्लादनारदपराशरपुण्डरीकव्यासादिभागवतपुङ्गवहृन्निवास** ப்ரஹ்லாதாழ்வான், நாரதமஹரிஷி பராசரமுனிவர் புண்டரீக பக்தர், வ்யாசாசார்யன் முதலான பாகவதோத்தமர்களுடைய

ஹ்ருதய கமலத்தில் வசிப்பவனே **भक्तानुरक्तपरिपालनपारिजात** பக்தர்களையும் அனுரக்தர்களையும் பரிபாலிப்பதில் பாரிஜாதம் போன்றவனே **लक्ष्मीनृसिंह** – ஓ அழகிய நரசிங்கப்பெருமானே **मम करावलम्बं देहि** — எனக்குகைப்பிடியைக்கொடுத்தருள வேண்டும்

(க – து) பக்தர்களிருவிதம் **उदारास्सर्वएवैते ज्ञानी त्वात्मैव मे मतम्** என்று கீதையில் கூறியபடி முந்திய மூவரும்பக்தர். பிந்தியவர் அனுரக்தர். அவ்விருதரத்தாரையும் **तेषां योगक्षेमं वहाम्यहम्** — என்றருளியப்ரகாரம் ரக்ஷிப்பதற்காக ஹ்ருதயகுகையிலேயே குடியிருந்துள்ளார். அவ்விதமஹிமைவாய்ந்த நரஸிம்ஹனே! என்னைக்காத்தருளவேண்டும் என்ற கருத்து 16

लक्ष्मीनृसिंहचरणाब्जमधुव्रतेन
स्तोत्रं कृतं शुभकरं भुवि शंकरेण ।
ये तत्पठन्ति मनुजा हरिभक्तियुक्ताः
ते यान्ति तत्पदसरोजमखण्डरूपम् ॥ 17

லக்ஷ்மீந்ருஸிம்ஹசரணாப்ஜமதுவ்ரதேன
ஸ்தோத்ரம் க்ருதம் சுபகரம் புவிசங்கரேண ।
யே தத்படந்தி மனுஜா ஹரிபக்தியுக்தா:
தே யாந்தி தத்பதஸரோஜமகண்டரூபம் ॥

(ப — ரை) **लक्ष्मीनृसिंहचरणाब्जमधुव्रतेन** – ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய சரணமாகிற தாமரைகளுக்கு வண்டுபோன்ற **शंकरेण** ஸ்ரீசங்கரநாமதேயம்பூண்ட ஆச்சாரியரால் **भुवि** - உலகத்தில் **शुभकरं** – க்ஷேமத்தைவிளைவிக்கக்கூடியதான **स्तोत्रम्** – இந்த ஸ்தோத்திரமானது **कृतम्** – அருளிச்செய்யப்பட்டது. **हरिभक्तियुक्ताः** – ஸ்ரீவிஷ்ணுவிடத்தில்பக்திநிறைந்தவர்களாய் **ये** எவர்கள் **तत्** அந்தஸ்தோத்திரத்தை **पठन्ति** – படிக்கின்றனரோ **ते** – அவர்கள் **अखण्डरूपं** – பரிபூர்ணானந்தஸ்வரூபமான **तत्पदांबुजम्** — அந்தபகவானது திருவடித்தாமரையை **यान्ति** அடைகின்றனர்.

(க — து) ஸ்ரீ சங்கரராலே உலகத்தின்க்ஷேமார்த்தம் இந்த ஸ்தோத்திரம் செய்யப்பட்டுள்ளது. இதைபக்தியுடன் படிப்பவர்கள் ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனது பிரமானந்த ஸாயுஜ்யத்தை எய்துவார்கள்என்பது நிச்சயம் 17

சுபம்

"ஹிதபாஷிணி"

இது ஓர் சிறந்த மாதப்பத்திரிகை.

இதை அனைவரும் அவசியம் படிக்கவேண்டியதற்கான சில முக்கிய காரணங்கள்.

ஸம்ஸ்கிருத பாஷையில் பயிற்சி இல்லாதவர்கள் கூட எளிதில் அந்த பாஷையில் உள்ள பல அரிய விஷயங்களை அறிந்து கொள்வதற்காக இது பல கட்டுரைகளைத்தாங்கி வெளியாகிறது.

2 ஷை பாஷையில் பயிற்சி உள்ளவர்களும் அறியாத, இது வரை எவ்விடத்திலும் வெளியிடப்படாத, தஞ்சை ஸரஸ்வதிமஹால் புத்தகாலயத்திலுள்ள சில நூல்களுடைய மொழி பெயர்ப்புகளும் இதில் பிரசுரிக்கப்படுகின்றன.

3 ஷை பாஷையில் அறிவை வளர்க்கும் சில கட்டுரைகளும் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

4 தொடர்ச்சியாக ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாசார்ய ஸ்வாமிகளவர்களால் இயற்றப்பட்ட நூல் ஒன்று தமிழ் மொழி பெயர்ப்புடன் வெளியாகிறது.

5 தர்ம தத்துவங்களையும், நமது புராதன நாகரீகங்களையும் புகட்டக்கூடிய சிறிய ரஸமான கதைகளும், காணப்படுகின்றன.

6 ஸங்கீதம், ஜ்யோதிஷம், வைத்யம், அர்த்தசாஸ்திரம் இவற்றிலிருந்தும் கட்டுரைகள் வெளியாகின்றன.

வருடச்சந்தா ரூ. 3 **தனிப்பிரதி அணா 5**

5 அணா ஸ்டாம்புகளை அனுப்பி மாதிரிப்பிரதியைப்பெறலாம்.

ஆசிரியர்:– **R. முத்துக்கிருஷ்ண சாஸ்திரி,**
1835/3, மேலவீதி, தஞ்சை.

மன்னார்குடி பிரஸ் லிமிடெட், மன்னார்குடி.